**பிப்ரவரி – 10**

# TNPSC துளிகள்

- திருநெல்வேலி மாவட்டத்தின் நாங்குநேரியிலும் மூலக்கரைப்பட்டியிலும் என மேலும் இரண்டு தொழிற்பேட்டைகள் நிறுவப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- கடல் ஆமைகளைப் பாதுகாக்க உதவும் வகையில் மீன்பிடிப் படகுகளில் 50 ஆமைகள் தப்பிக்க உதவும் சாதனங்கள் (TED) பொருத்தும் சோதனையைத் தொடங்குவதற்கு தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை திட்டமிட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற இடைத்தேர்தல் 2025



- ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.
- 46 வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்தத் தேர்தலில் 6,109 வாக்காளர்கள் NOTA (மேலே உள்ளவர்கள் யாரும் இல்லை) விருப்பத் தேர்வினைத் தேர்ந்தெடுத்தனர்.
- ஈரோடு (கிழக்கு) தொகுதியில் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்கள் 2,27,546- 1,10,128 ஆண்கள், 1,17,381 பெண்கள் மற்றும் 37 திருநர்கள் ஆவர்.
- இருப்பினும், 1,54,657 பேர் மட்டுமே வாக்களித்தனர், அதில் 74,260 ஆண்கள், 80,376 பெண்கள் மற்றும் 21 திருநர்கள் ஆவர்.

## பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் 2025

- தமிழ்நாடு அரசானது, அதன் பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தினை (SAPCC) இறுதி செய்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் ஒப்புதலுக்காக வேண்டி சமர்ப்பித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்திற்கான ஒரு பிரத்தியேக திட்டத்தினைத் தொடங்கி அதற்கு நிதி ஒதுக்கீட்டைச் செய்த முதல் இந்திய மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- SAPCC என்பது பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் முக்கியத் துறைகளுக்கு வெவ்வேறு தணிப்பு மற்றும் தகவமைப்பு உத்திகளை வகுக்கும் ஒரு முக்கிய ஆவணம் ஆகும்.
- இது வேளாண்மை, நீர்வளம், கடலோரப் பகுதி மேலாண்மை, காடு மற்றும் பல்லுயிர்ப்

பெருக்கம் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது.

- தமிழ்நாடு மாநிலமானது, இந்தியாவின் நிலப்பரப்பில் 4% பங்கினை கொண்டுள்ளது என்பதோடு இந்தியாவின் மக்கள்தொகையில் 6% பேர் தமிழகத்தில் வசிக்கின்றனர், ஆனால் இம்மாநிலம் இந்தியாவின் நீர் வளங்களில் 2.5% பங்கினை மட்டுமே கொண்டு உள்ளது.
- மேற்பரப்பு நீர் வளங்களில் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை மற்றும் நிலத்தடி நீரில் 80% ஆனது ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு விட்டன.
- தேசியச் சராசரியான 2,200 மீ$^3$ என்ற அளவுடன் உடன் ஒப்பிடும் போது தமிழகத்தில் உள்ள நீர்வளங்களின் தனிநபர் கிடைக்கும் தன்மை 900 மீ$^3$ மட்டுமேயாகும்.




## CPCB வாரியத்தின் முன்னுரிமை நதி வழித் தடங்கள்

Table - 27: Number of Polluted River Stretches in Tamil Nadu

| S NO. | RIVER | POLLUTED RIVER STRETCH/ LOCATION | MAX BOD OBSERVED (mg/L) | PRIORITY CLASS |
|---|---|---|---|---|
| 1. | ADYAR | TAMBARAM TO NANDANAM | 40.0 | I |
| 2. | AMRAVATI | ALONG MADHUTHUKKULAM AND ALONG KARUR | 4.0 | V |
| 3. | BHAVANI | ALONG BHAVANI | 4.6 | V |
| 4. | CAUVERY | ALONG METTUR, ALONG ERODE, KATTIPALAYAM TO TRICHY, KUMBAKONAM TO PITCHAVARAM | 17.0 | III |
| 5. | COOUM | AVADI TO SATHYA NAGAR | 345.0 | I |
| 6. | PALAR | ALONG VANIYAMBADI | 4.0 | V |
| 7. | SARABANGA | ALONG SALEM | 24.0 | II |
| 8. | TAMBIRAPARANI | PAPPANKULAM TO ARUMUGANERI | 7.5 | IV |
| 9. | THIRUMANIMUTHAR | ALONG SALEM | 56.0 | I |
| 10. | VASISHTA | ALONG SALEM | 230.0 | I |

- நீர்வளத் தரத் தரவுகளின் அடிப்படையில் சென்னை மற்றும் சேலத்தில் உள்ள ஆறுகள் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் (CPCB) "முன்னுரிமை நதி வழித் தடங்கள்" ஆக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- CPCB வாரியத்தின் படி, தமிழ்நாட்டில் மிக மோசமாக மாசுபட்ட 10 நதி வழித் தடங்கள் உள்ளன என்பதோடு அவை முன்னுரிமை I முதல் V வரை வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இவற்றில், சென்னையில் உள்ள அடையாறு மற்றும் கூவம் நதிகள், சேலத்திற்கு அருகிலுள்ள திருமணிமுத்தாறு மற்றும் வசிஷ்ட ஆறுகள் முன்னுரிமை I எனும் பிரிவில்

அடங்கும்.

- ஆவடி முதல் சத்யா நகர் வரையிலான கூவம் நதியின் வழித் தடமானது, குளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நீருக்கு அனுமதிக்கப்பட்ட 3 மி.கி/லி. என்ற வரம்பினை விட மிக அதிகமாக 345 மி.கி/லி என்ற உயிரிய உயிர்வளித் தேவையுடன் மோசமாக மாசுபட்டு உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஐந்தாண்டு பருத்தித் திட்டம் 2025




- இந்தத் திட்டம் ஆனது பருத்திகளின், குறிப்பாக கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை கொண்ட பருத்தி வகைகளின் உற்பத்தித் திறனை நன்கு அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவும் வழங்கப் படும்.
- இந்தத் திட்டமானது, 5F கொள்கைக்கு இணங்க உள்ளது மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதோடுத் தரமான பருத்தியின் நிலையான விநியோகத்தை அதிகரிக்கும்.
- இந்த முன்னெடுப்பு ஆனது உள்நாட்டு உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம், மூலப் பொருள்களின் கிடைக்கும் தன்மையினை உறுதிப்படுத்தி, இந்திய ஜவுளித் துறையின் உலகளாவியப் போட்டித் தன்மையை அதிகரிக்கும்.
- வேளாண்-ஜவுளி, மருத்துவ ஜவுளி மற்றும் செயற்கை இழை சார் ஜவுளி போன்ற தொழில்நுட்ப ஜவுளிப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை போட்டி விலையில் ஊக்குவிப்பதற்காக மிக முழுமையாக விலக்கு அளிக்கப்பட்ட ஜவுளி இயந்திரங்களின் பட்டியலில் மேலும் இரண்டு வகையான ஊடூசி இல்லாத தறிகள் சேர்க்கப்பட்டன.

- மத்திய நிதிநிலை அறிக்கையில், ஜவுளி அமைச்சகத்திற்கு 2025-26 ஆம் ஆண்டிற்காக 5272 கோடி ரூபாய் (நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகள்) ஒதுக்கீட்டை வழங்குவதாக அறிவித்தது.

## திறன் இந்தியா திட்டம் நீட்டிப்பு 2025


- மத்திய அரசின் திட்டமான 'திறன் இந்தியா திட்டத்தினை (SIP)' 2026 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கும் மறுசீரமைப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பின்வரும் மூன்று முக்கியக் கூறுகள், தற்போது "திறன் இந்தியா திட்டத்தின்" கூட்டு மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.
  - பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 4.0 (PMKVY 4.0),
  - பிரதான் மந்திரி தேசியத் தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (PM-NAPS), மற்றும்
  - ஜன் சிக்சான் சன்ஸ்தான் (JSS) திட்டம்
- PMKVY 4.0 திட்டம் ஆனது, சிறப்பு திட்டங்கள் (SP) மற்றும் மறு திறன் வழங்கீடு மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட குறுகிய காலப் பயிற்சி (STT) மூலம் தேசிய திறன் தகுதிகள் கட்டமைப்பு (NSQF) உடன் நன்கு இணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்குகிறது.
- JSS திட்டம் ஆனது ஒரு சமூகம் சாரந்த திறன் முன்னெடுப்பாகும்.
- இது தொழில் துறைப் பயிற்சியைக் குறிப்பாக பெண்கள், கிராமப்புற இளையோர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களுக்கு மற்றும் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்டவர்களுக்கு மிக அணுகக் கூடியதாகவும், தகவமைப்பு மிக்கதாகவும், உள்ளடக்கிய வகையிலானதாகவும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.




## ஸ்வவலம்பினி திட்டம்

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகம் (MSDE) ஆனது, நிதி ஆயோக் அமைப்புடன் இணைந்து அசாம், மேகாலயா மற்றும் மிசோரம் ஆகிய சில மாநிலங்களில் ஸ்வவலம்பினி திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த மகளிர் தொழில்முனைவோர் திட்டம் ஆனது, வடகிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் (HEIs) மாணவிகளுக்குப் பெரும் அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

- இது அவர்களின் தொழில்முனைவுப் பயணத்தில் பெரும் வெற்றி பெற அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய தொழில்முனைவோர் மனநிலை, வளங்கள் மற்றும் வழி காட்டுதலுடன் அவர்களைச் சித்தப்படுத்தும்.




## புதிய வேளாண் தொழில்நுட்பத் திட்டங்கள் 2025




- அரசு புதிதாக அறிவித்த குறைந்தது ஒன்பது புதியத் திட்டங்கள் ஆனது வேளாண் துறையை மட்டுமே மையமாகக் கொண்டவையாகும்.
- இருப்பினும், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்தமாக 2.5 சதவீதம் குறைக்கப்பட்டது.
- பிரதான் மந்திரி தன்-தான்ய கிரிஷி யோஜனா என்ற ஒரு திட்டமானது, தற்போதுள்ள திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் மாநில அரசுகளுடன் இணைந்து செயல் படுத்தப் படும்.
- இது குறைந்த உற்பத்தித் திறன், மிதமான பயிர் வளர்ப்பு செறிவு மற்றும் சராசரிக்கும் குறைவான கடன் அளவுருக்கள் கொண்ட 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விரிவான இந்தத் திட்டமானது மாநிலங்களுடன்

இணைந்து தொடங்கப்படும்.

- இது விவசாயிகளுக்கு அதன் உற்பத்தி, பயன்திறம் மிக்க விநியோகம், பதப்படுத்துதல் மற்றும் ஊதிய விலைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்திற்காக 2025-26 ஆம் ஆண்டிற்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- அதிக மகசூல் தரும் விதைகளுக்கான தேசியத் திட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 100க்கும் மேற்பட்ட அதிக மகசூல் தரும், பூச்சி எதிர்ப்பு திறன் கொண்ட மற்றும் பருவநிலை-எதிர்ப்பு திறன் கொண்ட விதை வகைகளின் வணிக ரீதியாக கிடைக்கும் தன்மை, மேம்பாடு மற்றும் பரப்புதலை இலக்காகக் கொண்டது.
- மக்கானா (தாமரை விதை) உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் மற்றும் அதன் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக பீகாரில் ஒரு மக்கானா வாரியம் நிறுவப் பட உள்ளது.
- திறன் பயிற்சி, முதலீடு மற்றும் தொழில்நுட்பம் மூலம் வேளாண்மையில் நிலவும் வேலைவாய்ப்பின்மையை நிவர்த்தி செய்வதற்காக மாநில அரசுகளுடன் இணைந்து 'கிராமப்புறச் செழிப்பு மற்றும் மீள்தன்மைத் திட்டம்' முன்னெடுப்பானது தொடங்கப் படும்.
- இது கிராமப்புற பெண்கள், இளம் விவசாயிகள், கிராமப்புற இளையோர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்றக் குடும்பங்கள் மீது கவனம் செலுத்தும்.
- யூரியா விநியோகத்தை மேலும் அதிகரிப்பதற்காக, அசாமின் நம்ரூப் எனுமிடத்தில் ஆண்டிற்கு 1.27 மில்லியன் டன் உற்பத்தி திறன் கொண்ட யூரியா ஆலை அமைக்கப் படும்.

## பருப்பு வகைகளில் சுய சார்பிற்கான திட்டம் 2025


**IMPORTS OF MAJOR PULSES (IN LAKH TONNES)**

| | Peas (Matar) | Chickpea (Chana) | Lentil (Masoor) | Pigeonpea (Tur/Arhar) | Urad & Moong** |
|---|---|---|---|---|---|
| 2014-15 | 19.52 | 4.19 | 8.16 | 5.75 | 6.23 |
| 2015-16 | 22.45 | 10.31 | 12.60 | 4.63 | 5.82 |
| 2016-17 | 31.73 | 10.81 | 8.29 | 7.04 | 5.75 |
| 2017-18 | 28.77 | 9.81 | 7.97 | 4.13 | 3.47 |
| 2018-19 | 8.51 | 1.86 | 2.49 | 5.31 | 5.74 |
| 2019-20 | 6.67 | 3.71 | 8.54 | 4.50 | 3.82 |
| 2020-21 | 0.46 | 2.95 | 11.16 | 4.43 | 4.17 |
| 2021-22 | 0.01 | 2.02 | 6.67 | 8.40 | 8.07 |
| 2022-23 | 0.01 | 0.63 | 8.58 | 8.94 | 5.57 |
| 2023-24 | 11.76 | 2.85 | 16.76 | 7.71 | 6.29 |
| 2024-25* | 15.77 | 2.92 | 5.91 | 10.00 | 5.30 |

- பருப்பு வகைகளில் சுய சார்பிற்கான ஒரு திட்டமானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற ஆறு ஆண்டு காலத் திட்டமாகும்.
- இது துவரை பருப்பு, உளுந்து, மசூர் (சிவப்பு பயறு) ஆகியவற்றின் உற்பத்தியின் மீது கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ், NAFED மற்றும் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு போன்ற மத்திய அரசு நிறுவனங்கள் ஆனது அடுத்த நான்கு ஆண்டுகளில், இந்த

நிறுவனங்களில் பதிவு செய்து ஒப்பந்தங்களில் பங்கேற்கும் விவசாயிகளிடமிருந்து அவர்களால் "உற்பத்தி செய்யக் கூடிய அளவினை" இந்தப் பருப்பு வகைகளை கொள் முதல் செய்யும்.

## அணுசக்தி திட்டம் 2025




- அணுசக்தி மேம்பாட்டை விரைவுபடுத்துவதற்கும், 2047 ஆம் ஆண்டிற்குள் மேம்பட்ட அணுசக்தி மீதான தொழில்நுட்பத்தில் இந்தியாவை உலகளாவிய முன்னணித்துவம் பெற்றதாக நிலைநிறுத்துவதற்கும் அணுசக்தி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 100 GW அணுசக்தித் திறனை உருவாக்குவது நமது நாட்டின் ஆற்றல் மாற்ற முயற்சிகளுக்கு அவசியமாகும்.
- இந்த இலக்கினை அடைவதற்காக வேண்டி தனியார் துறையுடனான ஒரு தீவிரமான கூட்டாண்மைக்காக, அணுசக்திச் சட்டம் மற்றும் அணு சேதத்திற்கான உரிமையியல் பொறுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
- சுமார் 20,000 கோடி ரூபாய் செலவில் சிறிய மாதிரி உலைகள் (SMRs) குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஓர் அணுசக்தி திட்டம் ஆனது அமைக்கப்படும்.
- உள்நாட்டிலேயே என்று உருவாக்கப்பட்ட குறைந்தபட்சமாக 5 SMR உலைகள் 2033 ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்தப்படும்.
- 1962 ஆம் ஆண்டின் அணுசக்திச் சட்டமானது, இந்தியாவில் தனியார் துறை அணு மின் உற்பத்தியைத் தடை செய்கிறது.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான NPCIL மற்றும் பாரதிய நபிகியா வித்யுத் நிகாம் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்கள் மட்டுமே இந்தியாவில் அணு மின் உற்பத்தி நிலையங்களைச் சொந்தமாக வைத்திருக்கவும் அவற்றை இயக்கவும் வேண்டி சட்டப் பூர்வமாக அனுமதிக்கப்படுகின்றன.
- 2010 ஆம் ஆண்டு அணு சேதத்திற்கான உரிமையியல் பொறுப்புச் சட்டம் ஆனது, எந்த ஒரு அணு விபத்திற்குமான பொறுப்பை அணுசக்தி நிலைய இயக்க அமைப்பின் மீது நிர்ணயிக்கிறது மற்றும் இயக்க அமைப்பின் மொத்தப் பொறுப்பை வரையறுக்கிறது.
- ஆனால் இது, அணு உலை வழங்கீட்டு நிறுவனத்திடம் இருந்து எவ்வித வரம்புமின்றி அணுமின் நிலைய இயக்க அமைப்பானது சட்டப்பூர்வ உதவியைப் பெற்றிட வேண்டி


அனுமதிக்கிறது.

- இந்திய நாடானது, தற்போது 8180 மெகாவாட்டாக உள்ள தனது அணுசக்தித் திறனை 2031-2032 ஆம் ஆண்டிற்குள் 22,480 மெகாவாட்டாக விரிவுபடுத்துவதற்காக செயலாற்றி வருகிறது.

# மாநிலச் செய்திகள்

## மின்சார வாகன உள்கட்டமைப்பு நிலை 2025

- மிகவும் அதிக மின்சார வாகனங்கள் (EV) மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு எனத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.
- எண்ணெய்ச் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களால் நிறுவப்பட்ட மின்சார மின்னேற்ற நிலையங்களின் எண்ணிக்கையில் சுமார் 2,561 நிலையங்களுடன் உத்தரப் பிரதேசம் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (1,595), கர்நாடகா (1,516), இராஜஸ்தான் (1,482) மற்றும் தமிழ்நாடு (1,448) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- FAME இந்தியா திட்டத்தின் முதல் கட்டமானது 895 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை செயல்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமானது 11,500 கோடி ரூபாய் செலவில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டது.





# இதரச் செய்திகள்

## டெல்லி ஒன்றியப் பிரதேசச் சட்டமன்றத் தேர்தல் 2025

- சட்டமன்றத் தேர்தலில் 70 இடங்களில் 48 இடங்களைக் கைபற்றியதன் மூலம் 26 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு பா.ஜ.க டெல்லியில் வெற்றி பெற்று உள்ளது.

- ஆம் ஆத்மி கட்சி (AAP) ஆனது 22 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் காங்கிரஸ் தொடர்ந்து மூன்றாவது முறையாக தோல்வியடைந்தது.
- மதியா மஹால் தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் ஆலே முகமது இக்பால் 42,724 வாக்குகள் வித்தியாசத்தில் அதிக வெற்றியைப் பெற்றார்.
- பாஜக கட்சியின் வேட்பாளர் சந்தன் குமார் சௌத்ரி என்பவர், சங்கம் விஹார் என்ற தொகுதியில் மிகவும் குறைந்தபட்சமாக 344 வாக்குகள் என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.
- பிப்ரவரி 05 ஆம் தேதி முடிவடைந்த இந்தத் தேர்தலில் ஒட்டு மொத்தமாக 60.39% அளவு வாக்குகள் பதிவானது.
- அதிகபட்ச வாக்குப்பதிவு ஆனது முஸ்தபாபாத்தில் (69%) பதிவானது.
- கரோல் பாக் தொகுதியில் மிகக் குறைந்தபட்ச வாக்குகள் (47.40%) பதிவானது.
- சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக, டெல்லி மற்றும் அதை ஒட்டிய அனைத்து மாநிலங்களிலும் பாஜக இப்போது ஆட்சியைக் கொண்டிருக்கும்.




## 'Art in Prison' முன்னெடுப்பு

- நாட்டுப்புறக் கலை, நாடகம், தாவரவியல் சார் நீல அச்சுப்படிவக் கலை மற்றும் இசை

போன்ற கலைகளை சென்னை மத்திய சிறைச்சாலைக்குள் (புழல்-1) அறிமுகப் படுத்த வேண்டியது பற்றிய ‘Art in Prison’ முன்னெடுப்பானது, தற்போது ஓராண்டு காலத்திற்குத் தொடரப்பட உள்ளது.

- இந்த முன்னெடுப்பினை சுமனாசா அறக்கட்டளை மற்றும் திட்டம் 39A ஆகியவை நம் வீடு நம் ஊர் நம் கதை அமைப்புடன் இணைந்து மேற்கொள்கின்றன.
- இந்த முன்னெடுப்பில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள புத்தக இயக்கத்திற்காக ஏற்கனவே சுமார் 500 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு சேகரிப்பு இயக்கத்திற்குப் பிறகு, இந்தப் புத்தகங்கள் ஆனது புழல் மத்திய சிறைச் சாலையின் கைதிகளுக்கு அனுப்பப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★